IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 77/2021

| | |
|---|---|
| Deposition of Witness | : DW 1 |
| Name | : அண்ணாதுரை (வயது – 62) |
| Father's Name /W/o | : த/பெ ஏழுமலை |
| Religion | : இந்து |
| Caste | : – |
| Calling | : – |
| Address | : களத்தூர் |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 24.09.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்தின் செக்பந்தி என்னவென்றால் கிழக்கில் நாகப்பன் நிலம், வடக்கில் சங்கரமடம் ஆறு, மேற்கில் ஆறுமுகம் என்பவரின் நிலம், தெற்கில் பாலாறு ஆகும். மேற்கில் ஆறுமுகம் என்பவரின் நிலம் உள்ளது என்றாலும் அவர் யார் என்றால் என் பெரியப்பா. மேற்படி ஆறுமுகம் 2 ஆம் வாதியின் தந்தை என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் ஆறுமுகத்தின் நிலம் என்றால் 1 ஏக்கர் 5 1/2 செண்ட் அவர் பாகம். 1 ஏக்கர் 5 1/2 செண்ட் என் பாகம்.

2. மேற்படி 1 ஏக்கர் 5 1/2 செண்ட் என் பாகம் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் வரி ரசீது மற்றும் சாகுபடி அடங்கல் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 4 சாகுபடி அடங்கடல் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேல் பக்கத்தில் ஏகநாதன் பெயர் உள்ளது என்றால் பட்டா ஏகநாதன் பெயரில் இருந்ததால் அவர் பெயரில் சாகுபடி அடங்கல் வழங்கியுள்ளார் இன்னும் என் பெயரில் பட்டா மாற்றம் செய்யவில்லை.

3. இன்றைய தேதிவரை தாவா சொத்திற்கான பட்டா ஏகநாதன் பெயரில் உள்ளதை நான் ஒப்புக் கொள்கிறேன் என்றால் நான் பட்டா மாற்றம் செய்ய மனு அளித்துள்ளேன் அதற்குள் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 7 எந்த தேதியில் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு மனு அனுப்பினேன் என்றால் 05.04.2022 தேதியில் அனுப்பினேன். எனவே இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் நான் மேற்படி மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு மனு அனுப்பினேன் என்றால் நான் பலமுறை வாதியிடம் பட்டா மாற்றம் செய்ய கோரியுள்ளேன் பஞ்சாயத்திலும் பேசினோம் வாதி பட்டா மாற்றம் செய்ய முன்வரவில்லை பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

4. எனக்கு உரிமையில்லாத சொத்துக்காக அடாவடியாக மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு மனு அனுப்பினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 ஆறுமுகம் வாங்கிய சொத்து என்றாலும் ஏழுமலை பெயர் இந்த பத்திரத்தில் மேல் பக்கம் குறிப்பிட்டுள்ள ஒரே காரணத்தினால் தாவா சொத்து எனக்கு உரிமையாகாது என்றால் 1957 ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை நடைபெற்றதில் இருந்து நாங்கள் தான் பயிர் வைத்து அனுபவித்து வருகிறோம் அதற்கான வரி கட்டி வருகிறோம் அதனால் எனக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது.

5. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 6 நான் கட்டிய வரியா என்றால் சரிதான் என் தந்தை வரி கட்டியுள்ளார். மேற்படி வரி ரசீது என் பெயரில் உள்ள ஒரே காரணத்தினால் தாவா சொத்தில் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 105/1. சர்வே எண் 105/1 ஏழுமலைக்கு உரிமையானது என்று மேற்படி வரி ரசீதில் எங்கு எழுதியுள்ளது என்றால் என் தந்தை வரி கட்டினார்கள் அதற்கு வரி ரசீது வழங்கினார்கள் மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது.

6. தாவா சொத்தின் பட்டா என் என்னவென்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 6 வரி ரசீது பட்டா எண் குறிப்பிடாமல் வழங்கமாட்டார்கள் என்றால் பட்டா எண் குறிப்பிட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 6 இல் பட்டா எண் எங்கு குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து 1956 ஆம் ஆண்டில் ஆறுமுகம் வாங்கியது என்றால் ஆறுமுகம் மற்றும் ஏழுமலை கூட்டாக வாங்கினார்கள்.

7. என் தந்தை ஏழுமலை மற்றும் ஆறுமுகம் சேர்ந்து தாவா சொத்தை வாங்கியதற்கு ஆவணம் உள்ளதா என்றால் பத்திரத்தில் அவர் பெயர் உள்ளது. மேற்படி ஆவணம் பி.சா.ஆ – 3 ஆறுமுகம் தான் முழு தொகையும் கொடுத்து வாங்கினார் என்றாலும் ஏழுமலை பெயர் பத்திரத்தில் மேல்புறம் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளது என்றாலும் அவர் விற்பனை தொகை கொடுக்கவில்லை என்றால் அவர்கள் கூட்டு குடும்பமாக இருந்ததால் அண்ணன் ஆறுமுகம் பெயரில் பத்திரம் எழுதப்பட்டுள்ளது.

8. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 வடக்கு பக்கம் உம்முடைய நிலத்திற்கு என்று செக்பந்தியில் குறிப்பிட்டுள்ளது என்றாலும் அதனால் மேற்படி நிலம் ஆறுமுகத்திற்கு சொந்தம் என்றால் என் தந்தை மற்றும் ஆறுமுகம் இரண்டு பேரும் சேர்ந்து தான் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 7 எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் செக்பந்தியில் என் தந்தை பெயர் குறிப்பிட்டுள்ளதால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 7 எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி யார் யார் பெயரில் பதிவு செய்தார்கள் என்றால் நாகப்பன் என்பவர் கிருஷ்ணவேனிக்கு அடமானம் எழுதி வைத்தார்கள்.

9. மேற்படி ஆவணத்தில் இருக்கும் சொத்திற்கு பக்கத்தில் என் நிலம் உள்ளதா என்றால் கீழ் பக்கம் நாங்கள் அனுபவித்து வருகிறோம். ஏழுமலைக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆறுமுகமும் என் தந்தையும் ஏழுமுலையும் எந்த வருடம் வரை கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்றால் 1957 ஆம் ஆண்டு வரை கூட்டு

குடும்பமாக இருந்தார்கள்.

10. நான் 1963 ஆம் ஆண்டில் பிறந்தேன் என்றாலும் அதற்கு முன்பு நடந்த விபரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் நான் செவி வழியாக கேட்டு தெரிந்த விஷயங்கள் உண்மை இல்லை என்றால் சரியல்ல மேற்படி சங்கதிகள் என் தந்தை என்னிடம் சொன்னார். நாகம்மாள் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை எனவே என் பிரமாண பத்திரத்தில் நாகம்மாள் பஞ்சாயத்தில் பேசி தாவா சொத்தை பாகப்பிரிவினை நடந்தது எனக்கு நேரிடையாக தெரியாது என்பதால் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

11. என் பிரமாண வாக்குமூலம் பத்தி 24 இல் சர்வே எண்.105/1 இல் ஏக்கர் 1.05 1/2 செண்ட் நிலத்திற்குள் பயிர் செய்து சர்கார் தீர்வை செலுத்தி அனுபவித்து வருவது ஒன்றே எங்களின் உரிமை மற்றும் எங்கள் அனுபவத்தை நிரூபிக்கும், மேலும் நாங்கள் பயிர் செய்வதற்கான சாகுபடி அடங்கல் மற்றும் வருவாய் ஆவணங்கள் ஒன்றே எங்களின் அனுபவத்தை நிரூபிக்கும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சர்க்கார் தீர்வை கட்டவில்லை என்றாலும் நான் தாக்கல் செய்த சாகுபடி அடங்கல் ஏகநாதன் பெயரில் தான் உள்ளது என்றாலும் நான் அடாவடியாக ஆவணங்கள் இல்லாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.